ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2319/42 - 2023 පෙබරවාරි මස 14 වැනි අඟහරුවාදා - 2023.02.14

*2319/42 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 11/ 80 (29)*

**1989 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு மதியுரைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கெஹெலிய ரம்புக்வெல்ல,**
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2023, சனவரி 27.*

**ஒழுங்கு விதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டின் உணவு (சீனி மட்டங்களுக்கான நிறக்குறியீடு – திரவ) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 2024 ஆம் ஆண்டு சனவரி 1 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (1) குடிப்பதற்கு தயாரான வடிவமொன்றில் உள்ளதும் சீனியைக் கொண்டுள்ளதுமான ஏதேனும் திரவ உணவுக்கு இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறான முறையில் சுட்டுத்துண்டு இடப்படுதல் வேண்டும்.

(2) (அ) ஏதேனும் திரவ உணவின் கொள்கலத்தினது சுட்டுத்துண்டில் குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகளுக்கிணங்க அத்தகைய உணவின் திரவ வடிவத்தை மாற்றாமல் நுகர்விற்கு முன்னர் அது தயாரிக்கப்பட அல்லது மீளமைக்கப்பட வேண்டியுள்ளவிடத்து, அல்லது

1A - PG 6223 — 4.506 (2023/02)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஆ) ஏதேனும் திண்ம அல்லது அரைத் திண்ம உணவின் கொள்கலத்தினது சுட்டுத்துண்டில் குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகளுக்கிணங்க அத்தகைய உணவின் நுகர்விற்கு முன்னர் அது தயாரிக்கப்பட்டு அல்லது மீளமைக்கப்பட்டு திரவ வடிவத்துக்குக் கொண்டு வரப்பட வேண்டியுள்ளவிடத்து;

அத்தகைய, திரவ அல்லது திண்ம அல்லது அரைத் திண்ம உணவு அவ்வாறு தயாரிக்கப்படுவதன்மேல் அல்லது மீளமைக்கப்படுவதன் மேல் கொள்கலத்தில் சீனியைக் கொண்டுள்ளதாவிருக்குமிடத்து, இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறான முறையில் அத்தகைய உணவின் கொள்கலம் சுட்டுத்துண்டிடப்படுதல் வேண்டும்.

(3) இந்த ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் உணவு முற்பொதியிடப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட தயாரிப்பொன்றாகவுள்ளமிடத்து, அத்தகைய உணவின் கொள்கலத்தின் மீது அல்லது பொதியின் மீது குறைநிரப்புச் சுட்டுத்துண்டொன்று ஒட்டப்படலாமென்பதுடன் அத்தகைய சுட்டுத்துண்டு இவ்வொழுங்கு விதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறான சின்னங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

3. (1) இவ்வொழுங்குவிதிகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் உணவு இதற்கான அட்டவணையின் நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட சீனியின் ஏதேனும் அளவைக் கொண்டுள்ளவிடத்து அத்தகைய உணவைக் கொண்டுள்ள அத்தகைய கொள்கலத்தின் அல்லது பொதியின் சுட்டுத்துண்டு இதற்கான அட்டவணையின் நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட நேரொத்த நிறத்தில் இதற்கான அட்டவணையின் நிரை III இல் குறித்துரைக்கப்பட்டதும் (இதனகத்துப்பின்னர் "சின்னம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) நேரொத்த சின்னத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின் (1) ஆம் உப ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட சின்னம் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்கத் தயாரிக்கப்படுதலும், வடிவமைக்கப்படுதலும், வெளிக்காட்டிவைக்கப்படுதலும் வேண்டும் :-

(அ) சின்னத்தின் உயரம் 2 சென்றிமீற்றருக்குக் குறையாதிருத்தல் வேண்டுமென்பதுடன் சின்னத்தின் அகலம் 1 சென்றிமீற்றருக்குக் குறையாதிருத்தலும் வேண்டும் ;

(ஆ) (i) அத்தகைய உணவில் "சீனி" உள்ளீட்டின் விவரணம் ஒன்று இதற்கான அட்டவணையின் நிரை III இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் வெள்ளை நிறத் தடித்த எழுத்தில் முறையே சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சின்னத்தினுள் வெளிக்காட்டிவைக்கப்பட்டிருத்தலும் வேண்டும். அத்துடன் அது ஆகக் குறைந்தது 2 மி.மீ. எழுத்துரு அளவில் இருத்தல் வேண்டும்;

(ii) அத்தகைய உணவில் உள்ள சீனியின் உள்ளீடு பற்றிய எண்சார் விவரணம் இதற்கான அட்டவணையின் நிரை III இல் காட்டப்பட்டவாறாக ஒரு வெள்ளை நிற அடைப்பினுள் இருத்தல் வேண்டுமென்பதுடன் கறுப்பு நிற தடித்த எழுத்தில் ஆகக்குறைந்தது 1.5 மி.மீ. எழுத்துரு அளவில் இருத்தலும் வேண்டும்.

4. சின்னமானது அத்தகைய உணவைக் கொண்டுள்ள கொள்கலன் அல்லது பொதியின் சுட்டுத்துண்டினது பிரதான முகப்பில் வெளிக்காட்டிவைக்கப்படுதல் வேண்டும்.

5. இவ்வொழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் உணவு இவ்வொழுங்குவிதிகள் வலுவுக்கு வருகின்ற நேரத்தில் புழக்கத்திலுள்ள கண்ணாடிப் போத்தல்களில் அடங்கியுள்ளவிடத்து, சின்னமானது, 2024, மே மாதம் 1 ஆந் திகதி வரை அத்தகைய கண்ணாடிப் போத்தலின் தலைப்பில் அல்லது அடைப்பில் வெளிக்காட்டிவைக்கப்படுதல் வேண்டும்.

6. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றிற்கு ஏற்புடையனவாதல் ஆகாது :-

(அ) இவ்வொழுங்குவிதிகளில் குறிப்பீடு செய்யப்பட்டதும் 0.5 கிராமுக்கு / 100 மில்லிலீற்றருக்குக் குறைவான அளவில் உள்ளார்ந்த சீனியை அல்லது சேர்க்கப்பட்ட சீனியைக் கொண்டுள்ளதுமான ஏதேனும் உணவு;

(ஆ) போத்தலிலடைக்கப்பட்ட அல்லது பொதியிடப்பட்ட குடிநீர் அல்லது இயற்கைக் கனிப்பொருள் நீர் ;

(இ) ஏதேனும் தரப்படுத்தப்பட்ட பால் பகுதியளவில் ஆடை நீக்கப்பட்ட பால், கொழுப்புக் குறைந்த பால், ஆடை நீக்கிய பால், கொழுப்பற்ற பால், அல்லது பாச்சர் பிரயோகத்துக்கு அல்லது தொற்றுநீக்குகைக்கு அல்லது அதீத வெப்பப் பரிகரிப்புக்கு (UGT) உட்படுத்தப்பட்டுள்ள திறத்தகவுப் பால் (toned milk);

(ஈ) வாசனைப் பொருட்கள் மற்றும் வாசனைப் பொருட் கலவைகள், உணவுச் சேர்க்கைகள், சுவையூட்டப்படும் பதார்த்தங்கள், கறுப்புத் தேயிலை, பச்சைத் தேயிலை, அரைத்த கோப்பி, தனி ஆக்கக்கூறு மூலிகைசார் கரைசல், தேன், பாணி மற்றும் 100% குளுக்கோஸ்;

(ஊ) சிசுக்களுக்கான சூத்திரம் (ஆரம்பம்), பின்தொடர் சூத்திரம் ;

(ஊ) விசேட உணவுப் பாவனைகளுக்கான உணவுகள் அல்லது மருத்துவ வழிகாட்டுதலின் கீழ் அல்லது ஒரு மருத்துவத் தொழிலரின் விதப்புரையின் மீது அது பயன்படுத்தப்பட வேண்டுமெனச் சுட்டுத்துண்டு வெளிப்படையாக வெளிக்காட்டிவைக்குமிடத்தான ஏதேனும் உணவு;

(எ) தனியாக ஏற்றுமதி நோக்கத்துக்காக மட்டுமே பொதியிடப்படும் தயாரிப்புகள்;

(ஏ) பேரளவைக்கொண்ட பொதிகளில் அடங்கியுள்ள சில்லறைப்பொதிகள் இவ்வொழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுமிடத்து, பேரளவைக் கொண்ட பொதிகள் ; அல்லது

(ஐ) இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருகின்ற திகதிக்கு முன்னர் உற்பத்தி செய்யப்பட்டதும் இவ்வொழுங்குவிதிகளில் குறிப்பீடு செய்யப்பட்டதுமான ஏதேனும் உணவு.

7. இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டு மே மாதம் 3 ஆந் திகதிய 1965/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் உணவு (சீனி மட்டங்களுக்கான நிறக் குறியீடு) ஒழுங்குவிதிகள், அவற்றின் கீழ் சட்டமுறையாக செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் ஒழிக்கப்படுகின்றன.

8. இவ்வொழுங்குவிதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய,

"அம்பர்" என்பது, சிவப்பு, பச்சை, நீலநில முறைமையில் (RGB) R225, G 195 மற்றும் B9 அல்லது அதற்குச் சமமானது எனப் பொருள்படும்;

"பச்சை" என்பது, சிவப்பு, பச்சை, நீலநில முறைமையில் (RGB) G 195 அல்லது அதற்குச் சமமானது எனப் பொருள்படும்;

"பிரதான முகப்பு" என்பது, சில்லறை விற்பனைக்காக வழக்கமுறையான வெளிக்காட்டிவைத்தல் நிலைமைகளின் கீழ் வெளிக்காட்டி வைக்கப்படுவதற்கு முன்வைக்கப்படுவதற்கு, காண்பிக்கப்படுவதற்கு அல்லது பரிசோதனை செய்யப்படுவதற்குக் கூடுதலான சாத்தியங்கொண்டதான சுட்டுத்துண்டின் பாகம் எனப் பொருள்படும்.

"சிவப்பு" என்பது, சிவப்பு, பச்சை, நீலநிற முறைமையில் (RGB) R230 அல்லது அதற்குச் சமமானது எனப் பொருள்படும்; அத்துடன்

"சீனி" என்பது, மொனோசக்கரைட்ஸ் அத்துடன் டைசக்கரைட்ஸ் என்ற வடிவத்தில் உணவில் அடங்கியுள்ள மொத்தச் சீனி எனப் பொருள்படும்.

**அட்டவணை**

**(ஒழுங்குவிதி 3)**

| நிரை I<br>சீனி உள்ளீடு | நிரை II<br>நிறம் | நிரை III<br>சின்னம் |
|---|---|---|
| 100 மில்லிலீற்றருக்கு 8.0 கிராமுக்குக் கூடியது | சிவப்பு |  |
| 100 மில்லிலீற்றருக்கு 2.5 கிராம் முதல் 8.0 கிராம் வரை | அம்பர் |  |
| 100 மில்லிலீற்றருக்கு 2.5 கிராமுக்குக் குறைவானது | பச்சை |  |

EOG 02 - 0152

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.